www.padippakam.com



# அரசுடனான மோதல் தமிழீழ போராட்டமாக அமையாது

## - மாறாக கூடுதல் அழிவே ஏற்படும் புளொட் அறிக்கை

இலங்கை அரசுடன் மோதல் ஒன்று ஏற்படுமாயின் அது தமிழீழ போராட்டமாக அமையப் போவதில்லை என்பதுடன் இன்றுவரை நாம் அனுபவித்த அழிவுகளிலும் பார்க்க கூடுதலான அழிவிற்கு தமிழ்மக்கள் தள்ளப்படுவார்கள் என்பதையும் நாம் உணர்ந்து கொள்வது அவசியம்.

அடக்கி ஒடுக்கப் பட்ட நிலையில் அதனை எதிர்த்துப் போராடுவதும் அதற்காக ஆயுதம் ஏந்துவதும் தவிர்க்க முடியாதது. ஆனால் அப்போராட்டத்தின் மூலம் பெற்ற பயனை அரசியல் ரீதியாக உறுதிப் படுத்துவது. ஆயுத அடாவடித்தனத்தால் அல்ல. பதிலாக சரியான உறுதியான அரசியல் அணுகுமுறையிலும், சாணக்கியத்திலுமே தங்கியுள்ளது. அதற்கு மேலாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் பரந்துபட்ட ஐக்கியமும் ஒருமைப்பாடும் மிக முக்கியமாகும்.

சீன மக்களின் விடுதலைப் போராட்டமாயினும் சரி, வியட்நாம் அல்லது கியூபா போராட்டங்களும் எமக்கு கற்றுத் தந்த பாடங்கள் இவையேயாகும். அதே போன்று ஆயுத பலத்தில் மாத்திரம் நம்பிக்கை கொண்டு செயல்பட்ட ஜப்பானிய இராணுவ மோகிக்களும் கிட்லரின் ஜெர்மனிக்கும் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஏற்பட்ட பேரழிவு வரலாற்றில் மறக்க முடியாத பாடமாகும்.

இலங்கை வாழ் தமிழ் மக்கள் மீது குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீதும் மலையக மக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் என்பதை இன்றைய அரசும் அதற்கு தலைமை தாங்கும் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

வட-கிழக்கில் இடம் பெற்ற பல்வேறு இயக்கங்களின் தீர்க்கமான போராட்டத்தின் காரணமாகவும் இந்தியத் தலையீட்டினாலும் தமிழ் மக்களுக்கு பல உரிமைகள் இன்று வழங்கப் பட வேண்டுமென அரசாங்கத்தினால் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இவை யாவும் நடைமுறைப்படுத்துவதில் செயலுருவம் பெறுவதில் இன்னும் பல தடைகளையும், இடையூறுகளையும் நாம் காண்கிறோம்.

இலங்கை அரசுடன் மீண்டும் ஒரு மோதல் ஏற்பட்டால் இலங்கை இராணுவத்தால் தரை மூலமாக முன்னேற முடியாது எனவும் ஆகாய மார்க்கமான விமானத் தாக்குதலை மாத்திரமே மேற் கொள்ள முடியும் எனவும் அவ்வாறு நடைபெறுமானால் மீண்டும் இந்தியா இலங்கைத் தமிழரை பாதுகாக்க முன்வரும் எனவும் மக்கள் மத்தியில் பிரச்சாரம்

படிப்பகம்

www.padippakam.com

செய்யப்படுகின்றது. இலங்கை பற்றி இந்தியா கொண்டுள்ள கண்ணோட்டமும் அணுகுமுறையும் எப்படியானது என்பதை வரலாறு தெரிந்தவர்கள் நன்கு உணர்வர். 1949ம் ஆண்டில் இந்திய வம்சாவளியினராகிய தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும், குடியுரிமையையும் இலங்கை அரசு பறித்து எடுத்த பொழுது இந்தியா தலையிடவில்லை. 1956, 1958, 1961, 1964, 1974, 1976, 1977 ஆகிய ஆண்டுகளில் தமிழர்கள் பெருமளவில் கொல்லப்பட்டு அநாதைகளாக்கப் பட்ட போதும் இந்தியா தலையிடவில்லை.

ஆனால் 1977க்குப் பின்பு இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கை மாற்றமும் இந்திரா காந்தி பதவியில் இல்லாத போது ஜே.ஆர். அரசு காட்டிய இந்திரா காந்தி விரோத செயற்பாடும் மீண்டும் ஆட்சிக்கு வந்த இந்திரா காந்தியின் இலங்கை பற்றிய கண்ணோட்டத்தை மாற்றமடையச் செய்தது. இலங்கையில் மேற்கத்தைய நாடுகள் சார்பான வெளிவிவகாரக் கொள்கை இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலாகக் கருதப்பட்டது. அதுவே பின்னர் தமிழர் பிரச்சினையை முன் வைத்து இலங்கையில் இந்தியாவை தலையிட வைத்தது.

சார்க் மாநாடு எங்கே நடத்தப் படவேண்டும் என்பது பற்றி இந்தியா மேற்கொண்டுள்ள அக்கறையீனமும் காஷ்மீர் பிரச்சினையில் இலங்கை கடைப்பிடிக்கும் மௌனமும் இரு நாடுகளுக்குமிடையே தற்பொழுது ஏற்பட்டுள்ள புதிய உறவினைப் புலப்படுத்தும் காரணிகளாகும். ஆகவே போலியான நம்பிக்கையூட்டலுக்கு தமிழ் மக்கள் பலியாகாதிருத்தல் அவசியமாகும்.

(தமிழீழ மக்கள் விடுதலைக் கழக பேச்சாளரான இ.மாதவன் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை. 15.06.1990)

S.Jeganathan
Mühl str.11
7100 HN/ Böcklingen

Tel. 07131 - 30722
0711 - 2571394

படிப்பகம்